# மாலைக்கதிர்

Maalaikkathir




சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 புரட்டாதி 29 புதன்கிழமை 15.10.2025 கதிர் 340

# மனுஷ நாணயக்கார கைது!



கொழும்பு, ஒக். 15

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் இன்று புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

வேலைவாய்ப்புக்காக முறையற்ற வகையில் இலங்கையர்களை இஸ்ரேலுக்கு அனுப்பி வைத்தல் குறித்து மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக மனுஷ நாணயக்கார, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் இன்று காலை முன்னிலையாகியிருந்தார்.

இதன்போது மனுஷ நாணயக்கார இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

### நீதிமன்ற உத்தரவுக்கமைய

# வெளியேற்றப்பட்டனர் கோப்பாய் பொலிஸார்





யாழ்ப்பாணம், ஒக். 15

கோப்பாய் பொலிஸார் நீதிமன்ற உத்தரவில் வெளியேற்றப்பட்டமையால் கோப்பாய் பொலிஸ் நிலையம் தற்காலிகமாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் நிலையம், இராச பாதை வீதியில் தனியாருக்குச் சொந்தமான காணிகள் மற்றும் வீடுகளை அடாத்தாக கைப்பற்றி அமைக்கப்பட்டருந்தது.

தமது காணிகள், வீடுகளை விட்டு பொலிஸார் வெளியேற்றப்பட்டு, தமது காணிகள் மற்றும் வீடுகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு, யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் கடந்த 2019ஆம் ஆண்டு காலப் பகுதியில் 7 உரிமையாளர்கள் வழக்குத் தொடர்ந்தனர்.

வழக்கு விசாரணைகள் கடந்த 6 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வந்த நிலையில் கடந்த ஜூன் மாதம் 27ஆம் திகதி தனியார் காணிகள், வீடுகளைப் பொலிஸார், உரிமையாளர்களிடம் மீள ஒப்படைத்து விட்டு, வெளியேற வேண்டும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

நீதிமன்றம் தீர்ப்பளித்து இரண்டு மாதங்களுக்கு மேலாகியும், பொலிஸார் காணிகள், வீடுகளை ஒப்படைக்காத நிலையில், இன்று புதன்கிழமை நீதிமன்றப் பதிவாளரின் முன்னிலையில் பொலிஸார் அவ்விடத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு, காணிகள் மற்றும் வீடுகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன. கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாகத் தமது காணிகள், வீடுகளை இழந்து வாடகை வீடுகளில் தங்கியிருந்தவர்களுக்குத் தற்போது சொந்தக் காணிகள், வீடுகள் கிடைத்தமை பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கோப்பாய் பொலிஸ் நிலையம் தற்காலிகமாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்துக்கு மாற்றப்பட்டுள்ளது.

# வடக்கு ஆளுநர் அலுவலகத்தை முற்றுகையிட்ட ஆசிரியர்கள்!



யாழ்ப்பாணம், ஒக். 15


வடக்கு மாகாண ஆசிரியர்கள் இன்று மாகாண ஆளுநர் அலுவலகத்தை முற்றுகையிட்டு மூன்றாவது நாளாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆசிரியர் இடமாற்றக் கொள்கையை சரியான முறையில் நடைமுறைப்படுத்துமாறும், கடந்த பத்து வருடங்களுக்கு மேல் பின்தங்கிய பிரதேசம் மற்றும் அதிகஷ்டப் பிரதேசங்களில் பணி புரிந்த ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் சரியான முறையில் வகுக்கப்படவில்லை என்பதைச் சுட்டிக்காட்டியும் வடக்கு மாகாண ஆசிரியர்கள் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முதல் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் இன்று புதன்கிழமை மூன்றாவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர்.

போராட்டத்தின்போது ஆளுநர் அலுவலகத்தினுள் போராட்டக்காரர்கள் உட்புக முயற்சித்த வேளை பொலிஸார் அவர்களைத் தடுத்து நிறுத்தினர். அதனால் போராட்டக் களத்தில் சிறிது நேரம் பதற்ற நிலை ஏற்பட்டது.

# 13 வயது சிறுமி சடலமாக மீட்பு!



நுவரெலியா, ஒக். 15

நுவரெலியா, பொகவந்தலாவை, பொகவானை தோட்டப் பகுதியில் வீடொன்றில் தொட்டிலில் ஊஞ்சல் ஆடி விளையாடிக் கொண்டிருந்தார் எனக் கூறப்படும் 13 வயது சிறுமி சடலமாக 7➤

# வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினராக சிவாஜிலிங்கம்

### ஆலயப் பிரதம குரு முன்னிலையில் சத்தியப்பிரமாணம்



வல்வெட்டித்துறை, ஒக். 15

வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினராக எம்.கே. சிவாஜிலிங்கம் சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

வல்வை முத்துமாரியம்மன் ஆலயப் பிரதம குருவும் அகில இலங்கை சமாதான நீதிவானுமாகிய தண்டபாணிக தேசிகர் முன்னிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை அவர் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். 7➤

# ரிஷாத்துக்கு எதிரான வில்பத்து வழக்கு தள்ளுபடி



கொழும்பு, ஒக். 15

இலங்கையின் வடக்கு மாகாணத்தில் முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக 2018ஆம் ஆண்டு முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக நாகலந்த கொடிதுவக்கு மற்றும் மலிந்த சேனவிரத்ன ஆகியோரால் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் இன்று தள்ளுபடி செய்யப்பட்டது.

ஏழு ஆண்டுகளாக நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த இந்த வழக்கில் பல தடவைகள் நீதிமன்ற உத்தரவு வழங்கப்பட்டதன் பின்னரும் வழக்குத் தாக்கல் செய்தவர்கள் நடைமுறைப்படி வழக்கை முன்னெடுக்காமையால் தீர்ப்பின்றி நீடித்து இந்த வழக்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்த வழக்குக்குச் சட்ட அடிப்படை எதுவும் இல்லை என்றும், உண்மையான சட்ட காரணங்களுக்காக அல்லாமல் ஊடக கவனத்தை பெறுவதற்காகவே தொடரப்பட்டதாக முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் 7➤

# மரக்கறி விலை வீழ்ச்சி - விவசாயிகள் பாதிப்பு

கொழும்பு, ஒக் .15

நுவரெலியா மாவட்டத்தில் மரக்கறி விலைகள் கடந்த சில நாட்களாகத் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து வருவதால், விவசாயிகள் கடுமையான நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர்.

குறிப்பாக, கேரட், லீக்ஸ், கோவா போன்ற மரக்கறிகள் கிலோ ஒன்றுக்கு 70 முதல் 90 ரூபாய் வரை மட்டுமே விற்பனையாகின்றன.

இதனால், உற்பத்திச் செலவைக்கூட ஈடுசெய்ய முடியாத துர்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தங்கள் கவலையை வெளிப்படுத்துகின்றனர்.

நுவரெலியாவில் உள்ள பொருளாதார மையங்களின் முதலாளிகள், உள்ளூர் விவசாயிகளிடமிருந்து மரக்கறிகளை வாங்குவதற்குப் பதிலாக, ஊவா மாகாணத்திற்குச் சென்று அங்குள்ள விவசாயிகளிடமிருந்து மரக்கறிகளை மலிவாகக் கொள்முதல் செய்கின்றனர்.

இதனால், நுவரெலியா விவசாயிகளின் மரக்கறிகள் விற்பனையாகாமல், நீண்ட காலத்திற்கு நிலத்தில் வைத்திருக்க முடியாத நிலை உருவாகியுள்ளது.

இதனால், மரக்கறிகள் அழிந்து போகும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

மேலும், உரம் மற்றும் மருந்து போன்றவற்றின் விலை அதிகரித்துள்ள நிலையில், மரக்கறிகளின் விலை குறைவதால் விவசாயிகள் மிகுந்த நட்டத்தைச் சந்திக்கின்றனர்.

இதுகுறித்து விவசாயிகள் தங்கள் அதிருப்தியைப் பின்வருமாறு தெரிவித்தனர்:

"கேரட், லீக்ஸ், கோவா போன்ற பயிர்களை மூன்று மாதங்களுக்கு மேல் நிலத்தில் பேண முடியாது. தொடர்ந்து பெய்யும் மழை காரணமாக மரக்கறிகள் அழியும் அபாயம் உள்ளது. உரம் மற்றும் மருந்து செலவுகள் அதிகமாக இருக்கும் நிலையில், அரசு எவ்வித மானியமும் வழங்கவில்லை. 70 முதல் 90 ரூபாய்க்கு மரக்கறிகளை விற்பனை செய்யும்போது உற்பத்திச் செலவைக் கூட ஈடுசெய்ய முடியாத நிலை உள்ளது. மேலும், நுவரெலியா விவசாயிகளிடமிருந்து மரக்கறிகளை வாங்காமல், முதலாளிகள் ஊவா மாகாணத்திற்குச் சென்று மலிவாக மரக்கறிகளை வாங்கி, அவற்றை நுவரெலியா மரக்கறிகள் என்று பிற மாவட்டங்களில் விற்பனை செய்கின்றனர். இதனால், நுவரெலியா விவசாயிகளுக்கு பெரும் நட்டம் ஏற்படுகிறது."

இந்தப்பிரச்சினைக்கு அரசு உரிய தீர்வை வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும், நுவரெலியாவில் தொடர்ந்து பயிரிடப்படும் மரக்கறி வகைகளுக்கு, கீழ்மட்டப்பிரதேசங்களில் உள்ள வயல்களில் இதே பயிர்கள் உற்பத்தி செய்யப்படுவதால், மரக்கறிகளுக்கான தேவை குறைந்து, உற்பத்தி அதிகரித்துள்ளது.

இதுவும் விலை வீழ்ச்சிக்கு ஒரு காரணமாக உள்ளது. இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வை அரசு வழங்க வேண்டும் என்று விவசாயிகள் வலியுறுததியுள்ளனர்.

ஐ)

# வங்கிக் கணக்கிலிருந்து 5.69 இலட்சம் ரூபாய் மோசடி: நால்வர் கைது



*கொழும்பு, ஒக் .15*

*2024 மே 29 அன்று குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் வடமேல் மாகாண கணினி குற்றப்பிரிவுக்கு கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில், வங்கிக் கணக்கு ஒன்றிலிருந்து 569,610 ரூபாய் மோசடி செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக நால்வர் நேற்று ( 14) கைது செய்யப்பட்டனர்.*

*கைது செய்யப்பட்டவர்கள் 30 மற்றும் 38 வயதுடைய தெஹிதெனிய மற்றும் முருதலாவ பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.*

*இவர்கள் இணையதளத்தில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த நீர் மோட்டார் ஒன்றை வாங்குவதாகக் கூறி, அதற்காக முன்பணம் செலுத்துவதாக கூறி, விற்பனையாளரின் வங்கிக் கணக்கின் மூவீ இலக்கத்தைப் பெற்று, பணத்தை மோசடி செய்ததாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.*

*பண மோசடி, தவறான பயன்பாடு மற்றும் நம்பிக்கைக்கு புறம்பாக நடந்துகொள்ளல் ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் ஒருவரும், அவருக்கு உதவிய மூவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.*

*சந்தேகநபர்கள் இன்று (15) வாரியபொல நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.*

*குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் வடமேல் மாகாண கணினி குற்றப்பிரிவு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.*

*(ஐ)*

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீடீ) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# அரசியல்மயமாகியுள்ள கல்வி வடக்கு ஆளுநர் யாருக்கு ஆதரவு? ஜோசப் ஸ்டாலின் கடும் சாடல்






இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் இன்றும் வடமாகாண ஆளுநர் செயலகம் முன் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

வடமாகாண கல்வி திணைக்களத்தினால் 'சேவையின் தேவை கருதி' என மேற்கொள்ளப்பட்ட ஆசிரிய இடமாற்றம் பாரபட்சமானதும் பழிவாங்கல் நோக்கமாக கருதும் நிலையில் குறித்த இடமாற்றத்தை உடன் இடைநிறுத்தி மீள மேற்கொள்ள வேண்டும் என இலங்கை ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஆசிரியர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

ஆசிரியர் இடமாற்ற கொள்கையை சரியான முறையில் நடைமுறைப்படுத்துமாறும், தற்போது உள்ள ஆசிரியர் இடமாற்றத்தில் அரசியல் பாகுபாடு மற்றும் பழிவாங்கல் காணப்படுவதுடன்,

தற்போதுள்ள அரசாங்கத்தின் கீழ் சில அதிகாரிகள் அவர்களின் சுயலாபத்துக்காக செயற்பட்டு வருவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்கள் தெரிவித்தனர். (ஐ)

## 10 லட்சம் ரூபா பெறுமதியான மஞ்சள் பறிமுதல்!



இலங்கைக்கு கடத்துவதற்காக உச்சிப்புளி அடுத்த சல்லித் தோப்பு கடற்கரையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த இலங்கை மதிப்பில் 10 லட்சத்து 50000 ரூபா பெறுமதியிலான 1200 கிலோ சமையல் மஞ்சள் பொதிகளை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.

ராமநாதபுரம் கடற்கரை இலங்கைக்கு மிக அருகே இருப்பதால் இந்திய இலங்கை சர்வதேச கடல் எல்லை ஊடாக இலங்கைக்கு கஞ்சா, சமையல் மஞ்சள், கடல் குதிரை, கடல் அட்டை உள்ளிட்ட பொருட்கள் அதிக அளவு கடத்தப்பட்டு வருகிறது.



இலங்கைக்கு கடத்தல் பொருட்கள் கடத்தப்பட்டு வருவதை சுங்கத்துறை அதிகாரிகள் கண்காணித்து கடத்தல் சம்பவங்களை தடுத்து நிறுத்தி பொருட்களை பறிமுதல் செய்வதுடன் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் கைது செய்து வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் சுங்கத்துறை அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் உச்சிப்புளி அருகே களிமண்குண்டு அடுத்த சல்லித்தோப்பு கடற்கரை பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டபோது சந்தேகத்திற்கு இடமாக கடற்கரை ஓரம் கிடந்த மூட்டைகளை சோதனை செய்ததில் அதில் இலங்கைக்கு கடத்துவதற்காக சமையல் மஞ்சள் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

இதையடுத்து 28 மூட்டைகளில் இருந்த சுமார் 1200 கிலோ எடை கொண்ட சமையல் மஞ்சள் மூட்டைகளை பறிமுதல் செய்த சுங்கத்துறையினர் ராமநாதபுரம் சுங்கத்துறை அலுவலகத்திற்கு எடுத்து சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

பறிமுதல் செய்யப்பட்ட சமையல் மஞ்சள் 10 லட்சத்து 50000 ரூபா பெறுமதியாக (இந்திய மதிப்பு ரூ.3 லட்சம்) இருக்கும் எனவும், மீனவர்கள் பொதுமக்கள் கடத்தல் சம்பவங்கள் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சுங்கத்துறை அதிகாரிகள் எச்சரித்துள்ளனர். (ஐ)

## 6000 அன்னாசிப் பயிர்களைப் பயிரிட்ட விவசாயிக்கு வெற்றியளித்த முதல் முயற்சி

கொழும்பு, ஒக் .15

அலுத்தோயா, சிங்ககம கிராமத்தில் தனது சொந்த நிதியில் 6,000 அன்னாசிச் செடிகளைப் பயிரிட்டுள்ள விவசாயி, இன்னும் இரண்டு மாதங்களில் அறுவடை செய்யத் தயாராக இருப்பதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

இதுவே அவர் அன்னாசிப் பயிரிடுவது முதலாவது முறையாகும். சிங்ககம கிராமத்தைச் சேர்ந்த ஏ.ஜி. திலகரத்ன பண்டார, சுமார் ஆறு லட்சம் ரூபாய் பணத்தைச் செலவு செய்து தனது காணியில் இந்தப் பயிர்செய்கையை மேற்கொண்டுள்ளார்.

பயிர்செய்கையின் ஒரு பகுதியாக, அவர் நீர்க் குழாய்களைப் பொருத்தி, வாரத்திற்கு இரண்டு முறை தவறாமல் நீர்ப்பாசனம் செய்து வருகிறார்.

தற்போதுள்ள பயிர்கள் நன்கு வளர்ந்து அறுவடைக்குத் தயாராக உள்ள நிலையில், இது அவரது வெற்றிகரமான முதல் முயற்சியாக அமைந்துள்ளது.

இந்தச் செய்கைக்கு அரசாங்கத்திடமிருந்தோ அல்லது வேறு நிறுவனங்களிடமிருந்தோ தனக்கு எந்தவிதமான உதவியும் கிடைக்கவில்லை என்றும், தனது சொந்த நிதியைக் கொண்டே இந்த முயற்சியைத் தொடங்கியதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கமோ அல்லது ஏனைய நிறுவனங்களோ தனக்கு உதவி செய்தால், தற்போதுள்ளதை விடப் பல மடங்கு பெரிய அளவில் அன்னாசிப் பயிர்செய்கையைத் தொடர முடியும் என்றும், அதன் மூலம் உற்பத்தியை அதிகரித்து நாட்டிற்குப் பங்களிக்க முடியும் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (ஐ)

## இஷாரா செவ்வந்தியை இலங்கைக்கு அழைத்து வர நேபாளம் சென்றது பொலிஸ் விசேட அதிரடிப் படை

கொழும்பு. ஒக். 15

இஷாரா செவ்வந்தியை நாட்டுக்கு அழைத்து வருவதற்காகப் பொலிஸ் விசேட அதிரடிப் படையின் அதிகாரிகள் இருவர் நேபாளம் சென்றுள்ளனர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பு, புதுக்கடை நீதிமன்றத்துக்குள் கடந்த பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த "கணேமுல்ல சஞ்சீவ" என்பவர் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய இஷாரா செவ்வந்தி நாட்டை விட்டுத் தப்பிச் சென்று தலைமறைவாக இருந்த நிலையில்நேபாளத்தில்வைத்து நேற்று செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார்.

நேபாள அரசின் உதவியுடன் இலங்கை பொலிஸார் மற்றும் சர்வதேச பொலிஸார் இணைந்து மூன்று நாளாக நேபாளத்தில் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது இஷாரா செவ்வந்தி கைது செய்யப்பட்டார்.

இஷாரா செவ்வந்தியுடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜே.கே. பாய் உட்பட மேலும் நால்வர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இஷாரா செவ்வந்தியை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக பொலிஸ் விசேட அதிரடிப் படையின் அதிகாரிகள் இருவர் இன்று புதன்கிழமை நேபாளத்துக்குச் சென்றுள்ளனர்.

இஷாரா செவ்வந்தி இன்று இரவுக்குள் நாட்டுக்கு அழைத்து வரப்படுவார் என பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## பாதீட்டை இலக்குவைத்தே அமைச்சரவையில் மாற்றம்! – நளிந்த ஜயதிஸ்ஸ விளக்கம்

கொழும்பு, ஒக் .15

கொள்கலன் விடுவிப்பு சம்பவத்துக்கும் அமைச்சரவை மாற்றத்துக்குமிடையில் எவ்வித தொடர்பும் இல்லை என அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பரந்துபட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக இந்த அமைச்சரவை மாற்றம் மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பு நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றது. அதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொள்கலன் விடுவிப்பு சம்பவத்துக்கும் அமைச்சரவை மாற்றத்துக்கும் இடையில் எவ்வித தொடர்பும் இல்லை. 323 கொள்கலன்கள் விடுவிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தேவையானளவு கலந்துரையாடியுள்ளோம்.

அந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை செய்ய ஜனாதிபதியும் குழுவொன்று நியமித்திருக்கிறார். இவ்வாறு பரிசோதனை செய்யும் கொள்கலன்கள் மற்றும் கொள்கலன் நெருக்கடியை தவிர்த்துக்கொள்வதற்காக முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளினூடாக பல்வேறு குளறுபடிகள் இடம்பெற்றுள்ளன என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்காகவே குழு நியமிக்கப்பட்டு அது தொடர்பான அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் விசாரணையும் இடம்பெற்று வருகிறது.

மார்ச், ஏப்ரல், டிசம்பர் போன்ற காலப்பகுதிகளில் கொள்கலன் நெருக்கடியை தவிர்த்துக்கொள்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகளினூடாக இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறுகின்றனவா என்பதை தேடிப்பார்க்க வேண்டியுள்ளது.

இதற்கு முன்னரும் 14 சந்தர்ப்பங்களில் இவ்வாறு கொள்கலன்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. வரவு செலவுத் திட்டத்தில் நாங்கள் ஆட்சி செய்யவில்லை. என்றார். (ஐ)

# ரயில்களில் வடமாநில பயணிகள் அட்டூழியம்: நெறிப்படுத்த ரயில்வே காவல் படைக்கு தெற்கு ரயில்வே உத்தரவு



ரயில்களில் வடமாநில பயணிகள் அட்டூழியத்தை நெறிப்படுத்த ரயில்வே காவல் படைக்கு தெற்கு ரயில்வே உத்தரவிட்டுள்ளது. தீபாவளி பண்டிகை நெருங்கி வரும் நிலையில் நேற்றைய தினம் திருப்பூரில் முன்பதிவு பெட்டிகளில்பயணம்செய்த வெளிமாநில தொழிலாளர்களால் முன்பதிவு பெட்டிகளில் பயணம் செய்வதற்கு டிக்கெட் முன்பதிவு செய்த பெண்களுக்கு இடம் கிடைக்காமல் பரிதவிக்கும் காட்சிகள் வெளியாகியது. பலமுறை புகார் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என சமூக வலைதளத்தில் பாதிக்கப்பட்டவர்கள் குற்றசாட்டு முன்வைத்திருந்தனர். தற்போது முன்பதிவு இல்லாத பெட்டிகளில்ஏறி பயணம்செய்பவர்களை நெறிப்படுத்துவதற்கு ரயில்வே காவல் படை மற்றும் ஊழியர்களுக்கு தெற்கு ரயில்வே உத்தரவிட்டுள்ளது.

அதன்படி முன்பதிவில்லாத பெட்டிகளில் தடுப்புகளை அமைத்து பயணிகளை வரிசையில் நெறிப்படுத்தி இரண்டாம் வகுப்பு இருக்கையில் முன்பதிவு செய்யாத பயணிகள் அமர்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் முன்பதிவு செய்யப்பட்ட பெட்டிகளில் மற்ற பயணிகள் ஏறுவதை தடுக்க கூடிய வகையில் ரயில்வே பாதுகாப்பது அறையில் அணைத்து விரைவு ரயில்களிலுமே கண்காணிப்பை தீவிரப்படுத்த வேண்டும்என்ற வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும் வடமாநிலம் செல்லக்கூடிய ரயில்கள் மற்றும் தொலைதூரம் செல்லக்கூடிய ரயில்களில் டிக்கெட் பரிசோதகர்கள் முன்பதிவு செய்யப்பட்ட பெட்டிகளில் பயணம் மேற்கொள்ளும் பயனாளர்களை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் எனவும் ஒவ்வொரு டிக்கெட் நிறுத்தங்களில் டிக்கெட் பரிசோதகர்கள் தங்களுக்கென்று கொடுக்கப்பட்ட பெட்டிகளில் முன்பதிவு செய்யப்பட்ட பயணிகள் மட்டுமே பயணம் மேற்கொள்கிறார்களா என்பதை கண்காணிக்க வேண்டும் என்ற வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது.

முன்பதிவு பெட்டிகளில் பயணிகளின் புகார்களுக்கு டிக்கெட் பரிசோதகர்கள் நேரில் சென்று உடனடியாக சோதனை செய்வதோடு விதிகளை மீறி பயணம் செய்பவர்களுக்கு அபராதம் விதிக்க வேண்டும் எனவும் தொடர்ந்து அந்த பெட்டிகளிலிருந்து அவர்களை கீழே இறக்க வேண்டும் எனவும் மீறும் டிக்கெட் பரிசோதகர்கள் மீது துறை சார்ந்த நடவடிக்கையை தீவிரபடுத்த இருப்பதாக ரயில்வே தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேவைப்பட்டால் பயணிகள் தொடர்புடைய புகார்களுக்கு ரயில் பாதுகாப்பில் உள்ள ரயில்வே பாதுகாப்புபடை காவலர்களை அழைத்து சரி செய்துகொள்ளுமாறும் டிக்கெட் பரிசோதகர்களுக்கு வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், பட்டாசுகளை எடுத்து செல்ல கூடாது. எளிதில் தீ பற்றும் பொருட்களை எடுத்து செல்ல கூடாது என்றும் தெரிவித்தனர். (ஐ)

## திருப்பத்தூரில் நலவாரிய ஆய்வுக்கூட்டம் 85 தொழிலாளர்களுக்கு ரூ.32 லட்சம் நலத்திட்ட உதவி

திருப்பத்தூரில் நடந்த நலவாரிய ஆய்வுக்கூட்டத்தில் 85 தொழிலாளர்களுக்கு சுமார் ரூ.32 லட்சம் நலத்திட்ட உதவிகளை நலவாரிய தலைவர் பொன்குமார், கலெக்டர் சிவசவுந்திரவல்லி ஆகியோர் வழங்கினர். திருப்பத்தூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை சார்பில் நலவாரியங்களுக்கான நலத்திட்ட செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நேற்று நடந்தது.

இதில் தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நலவாரிய தலைவர் பொன்குமார், கலெக்டர் சிவசவுந்திரவல்லி ஆகியோர் தலைமை தாங்கினர். இந்த கூட்டத்தில் தொழிலாளர்களின் பிரச்னைகள், தேவைகள் குறித்து விவாதிக்கப்பட்டது. இதையடுத்து நலவாரிய தலைவர் பொன்குமார் பேசியதாவது :

நலவாரிய பணிகள் தொடர்பாக இந்த ஆய்வுக்கூட்டம் நடக்கிறது. தொழிலாளர்களின் குறைகளை கேட்டறிந்து அதனை நிவர்த்தி செய்வது, வாரியத்தின் திட்டங்கள் மற்றும் பணப்பயன்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது சிறப்பு அம்சமாகும். இவற்றின் மூலம் கூடுதலாக தொழிலாளர்களை வாரியத்தில் இணைப்பதற்கு வழிவகை செய்ய முடியும்.

இந்த காரணங்களால்தான் தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தலின்படி மாவட்ட வாரியாக ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்படுகிறது. திருப்பத்தூர் மாவட்டத்தில் ஏற்கனவே ஒருமுறை ஆய்வு செய்துள்ளோம்.இதில் 88 ஆயிரம் தொழிலாளர்கள் பணப்பலன் பெற்றுள்ளனர். திருப்பத்தூர் மாவட்டத்தில் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்படுகிறது. பணியிடத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் விபத்தில் உயிரிழந்தால் அந்த குடும்பத்திற்கு ரூ.5 லட்சம் தொகை ரூ.8 லட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல பிற இடங்களில் விபத்து ஏற்பட்டு உயிரிழந்தால் ரூ.2 லட்சம், இயற்கை மரணமடைந்தால்ரூ.50,000 வழங்கப்படுகிறது. இதுதவிர ஈமச்சடங்கு நிதி ரூ.250.00 ஆகவும், திருமணத்திற்கான ரூ.25000 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. வீடு இல்லாத கட்டுமான தொழிலாளிகள் வீடு கட்ட ரூ.4 லட்சம் தரப்படுகிறது. வீட்டுமனை இல்லாத கட்டுமான தொழிலாளிக்கு நகர்ப்புற வீடு கட்டும் திட்டத்தின்கீழ், வீடுகள் வழங்கப்படுகிறது. நலவாரிய உறுப்பினரின் வாரிசுகள் மாநில அளவில் விளையாட்டு போட்டிகளில் கலந்துகொண்டால் ரூ.25,000ம், தேசிய போட்டியில் பங்கேற்றால் ரூ.50,000 அரப்படுகிறது. இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கி வருகிறார். நாட்டில் தமிழகத்தில்தான் 18 வகையான வாரியங்கள் செயல்படுகிறது. இவற்றின் மூலம் ஏராளமான தொழிலாளர்கள் பயன்பெறுகின்றனர். இவ்வாறு பேசினார்.இதையடுத்து கூட்டத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத்துறை சார்பில் 35 ஓய்வூதியதாரர்களுக்கு ரூ.42,000ஃ- மதிப்பீட்டில் ஓய்வூதிய உதவித்தொகை, 25 தொழிலாளர்களுக்கு ரூ.5,00,000 திருமண உதவித்தொகை, 1 தொழிலாளியின் வாரிசுதாரருக்கு ரூ.2.5 லட்சம் மதிப்பீட்டில் இயற்கை மரண உதவித்தொகை, 1 தொழிலாளியின் வாரிசுக்கு ரூ.55,000 இயற்கை மரண உதவித்தொகை, 1 பயனாளிக்கு ரூ.50,000 மருத்துவ படிப்பு உதவித்தொகையும், 1 பயனாளிக்கு ரூ.2.5 லட்சம் சாலை விபத்து மரண உதவித்தொகை, வீட்டுவசதி திட்டத்தின்கீழ் 21 பயனாளிகளுக்கு ரூ.21,00,000 வீடு கட்டுவதற்கான நிதியுதவி என மொத்தம் 85 தொழிலாளர் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு ரூ.31.97 லட்சம் வழங்கப்பட்டது. (ஐ)

## சட்டப்பேரவையில் அமளியில் ஈடுபட்ட அதிமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு



சட்டப்பேரவையில் அமளியில் ஈடுபட்ட அதிமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம் அளித்தார்.

அப்போது தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு தொடர்பாக அமைச்சர் சிவசங்கர் பேசினார். அப்போது தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு தொடர்பாக அமைச்சர் சிவசங்கர் பேச, அவற்றை அவைக்குறிப்பில் இருந்து நீக்க வேண்டும் என என அதிமுகவினர் அமளியில் ஈடுபட்டனர். தூத்துக்குடி துப்பாக்கிச்சூடு பற்றி கேள்வி எழுப்பியதை தொடர்ந்து அவையில் அமளியில் ஈடுபட்டனர்.

தூத்துக்குடியில் துப்பாக்கிசூடு நடந்ததா? இல்லையா? அதைத்தான் அமைச்சர் குறிப்பிட்டுப் பேசினார்" என முதலமைச்சர் கேள்வி எழுப்பினார். தொடர்ந்து சட்டப்பேரவையில் சபாநாயகர் இருக்கையை சூழ்ந்துகொண்டு அதிமுக உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் பரபரப்பு நிலவியது. அமளியில் ஈடுபட்டால் காவலர்களால் வெளியேற்றப்படுவீர்கள் என்று சபாநாயகர் எச்சரித்திருந்தார். சபாநாயகர் எச்சரித்திருந்த நிலையில் அவையில் இருந்து அதிமுகவினர் வெளிநடப்பு செய்தனர். வெளிநடப்பு செய்த அதிமுகவினர் அவை வாயிலில் நின்று கோஷம் எழுப்பினர். (ஐ)

## விஜயின் செயலால்தான் தவெக கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டது: அமைச்சர் எ.வ. வேலு பேச்சு



விஜயின் செயலால்தான் தவெக கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டது என அமைச்சர் எ.வ. வேலு தெரிவித்துள்ளார். கரூர் கூட்ட நெரிசல் சம்பவம் தொடர்பாக பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் விளக்கம் அளித்தார். தொடந்து இந்த சம்பவம் குறித்து பேசிய அமைச்சர் எ.வ. வேலு கரூரில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூட்டத்தில் நெரிசல் ஏற்படவில்லை. கரூர் சம்பவத்தைவிட அதிக கூட்டம் எதிர்க்கட்சித் தலைவருக்கு கூடியது அங்கு ஒன்றும் நடக்கவில்லை.

காரணம், எதிர்க் கட்சித் தலைவர் பேசுவதை கவனிக்க வருகிறார்கள் அவரும் பேருந்தில் ஏறி பேசுகிறார். எதிர்க்கட்சித் தலைவர் பேருந்தின் மீது ஏறி இரண்டு பக்கமும் கை காட்டுவதால் நெரிசல் ஏற்படவில்லை. விஜய் உள்ளேயே அமர்ந்து செல்கிறார் பேசும் இடத்தில் மட்டுமே மேலே வருகிறார் அதனால் நெரிசல். கரூரில் காவல் துறை பொறுப்புடன் மிகச் சிறப்பாகவே செயல்பட்டது என்று கூறினார். (ஐ)

# ஆதிக்கத்தால் வீழ்த்தப்பட்ட அழகி!



ஒருகாலத்தில் ஐரோப்பாவில் மிகவும் வெறுக்கப்பட்ட பெண்ணாக இருந்தவர் மேரி அன்டோனெட். அவரை தலைக்கனம் கொண்டவர், சதிகாரர், பொறுப்பற்ற முறையில் செலவு செய்பவர் என்று மக்கள் குற்றம் சாட்டினர். இறுதியில், பொதுமக்கள் முன்னிலையில் அவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ஆனால், இப்போது, அவரைச் சுற்றியுள்ள பல்வேறு புரளிகள் மற்றும் கட்டுக்கதைகளை ஆராயும் முயற்சி நடக்கிறது.

1770 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆஸ்திரியாவின் பேரரசி மரியா தெரசா, தனது 14 வயது மகள் மரியா அன்டோனியாவிடம், "அனைவரின் பார்வையும் உன் மீதே இருக்கும்"என்று கூறினார்.

ஆனால்,14 வயதில் 16 ஆம் லூயிஸை திருமணம் செய்துகொண்ட மேரி அன்டோனெட், அவரது வாழ்நாள் முழுவதும் இழிசொல்லுக்கு ஆளானார். மேரி அன்டோனெட்டைச் சுற்றியுள்ள ஈர்ப்பு நூற்றாண்டுகள் கடந்தும் குறையவில்லை. ஆனால் இன்று, அவரது வாழ்க்கையைப் பற்றி கேள்விகள் எழுப்பப்படுகின்றன.

அவர் உண்மையில் வெறுக்கப்பட வேண்டியவரா? அல்லது பல்வேறு அரசியல், சமூக நலன்களின் மோதலில் சிக்கி, பொய்களால் அழிக்கப்பட்ட ஒரு தியாகியா?

செப்டம்பர் 20 ஆம் திகதி விரூஏ அருங்காட்சியகத்தில் தொடங்கிய 'மேரி அன்டோனெட் ஸ்டைல்' ('ஆயசநை யுவெழநைவவந ளுவலடந') என்ற கண்காட்சியின் பொறுப்பாளரான டொக்டர் சாரா கிராண்ட், மேரி அன்டோனெட்டை "வரலாற்றில் மிகவும் நாகரிகமான, அதிகம் ஆராயப்பட்ட மற்றும் சர்ச்சைக்குரிய ராணி" எனக் கூறுகிறார். இந்த கண்காட்சி, மேரி அன்டோனெட்டின் 270 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, அவரது தனிப்பட்ட பாணியை கொண்டாடுகிறது. கூடவே, அவரைச் சுற்றியுள்ள பொய்கள் மற்றும் கட்டுக்கதைகளையும் ஆராய்கிறது. மேரி அன்டோனெட்டைச் சுற்றியுள்ள மிகப் பிரபலமான புரளிகளில் ஒன்று, அவர் கூறியதாக பரவி வந்த "அவர்கள் கேக் சாப்பிடட்டும்" என்ற வாசகம்.

பிரான்சில் பசியால் வாடிய மக்களை 'ரொட்டி இல்லாவிட்டால் கேக் சாப்பிடுங்கள்' என்று அவர் அக்கறையற்று பதிலளித்ததாக பரவியது. ஆனால் உண்மையில் இதற்கான எந்த ஆதாரமும் இல்லை. இந்த வாசகம் 1765 இல் எழுதப்பட்ட ஊழகெநளளழைளெ என்ற நூலில், "ஒரு சிறந்த இளவரசி" கூறியதாக முதன்முதலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அப்போது மேரி அன்டோனெட்டுக்கு வயது வெறும் 10 தான். அவர் அதுவரை ஆஸ்திரியாவில் தான் இருந்தார்.

எனவே, அந்த வாசகத்தை அவர் கூறியிருப்பதற்கான வாய்ப்பு குறைவு.

அதேபோல், 1785-1786 இல் நடந்த "வைர நெக்லஸ் விவகாரம்" என்பதும் மற்றொரு போலிச் செய்தி. 600 க்கும் மேற்பட்ட வைரங்களைக் கொண்ட விலைமதிப்பற்ற நெக்லஸ், ராணியின் பெயரில் பொய்யாக ஓர்டர் செய்யப்பட்டதாக கூறப்பட்டது. விசாரணையில் அவர் குற்றமற்றவர் என நிரூபிக்கப்பட்டபோதிலும், இந்தச் சம்பவம் அவருக்கு 'அதிகப்படியான ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்த ராணி' என்ற பெயரை பெற்றுக் கொடுத்தது.

இந்த நெக்லஸின் பிரதி, அசல் கற்களைக் கொண்டதாகக் கூறப்படும் சதர்லேண்ட் நெக்லஸ் உடன் தற்போது நடைபெறும் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளது. அவரது ரசனையையும் பாணியையும் பிரதிபலிக்கும் பல பொருட்களும் அங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. 1800-1890 கால கட்டத்தில் பிரெஞ்சு மறுமலர்ச்சி காலத்தில் உருவாக்கப்பட்ட ஆடம்பரமான உபயோகப் பொருட்கள் மற்றும் இயக்குநர் சோபியா கொப்போலாவின் ஆஸ்கார் வென்ற ஆயசநை யுவெழநைவவந (2006) திரைப்படத்திற்காக மனோலோ பிளானிக் வடிவமைத்த அழகான இளஞ்சிவப்பு பூக்களுடன் கூடிய காலணிகளும் அங்கே வைக்கப்பட்டுள்ளன.

"அவரைக் குறிக்கும் எல்லா விஷயங்களும் இன்னும் என்னை ஈர்க்கின்றன" என்று அந்தக் கண்காட்சிக்கான பட்டியலின் முன்னுரையில் மனோலோ பிளானிக் எழுதியுள்ளார். 2006ம் ஆண்டு வெளியான சோஃபியா கொப்போலாவின் திரைப்படம் பட மூலாதாரம்,ஐ றுயவெ ஊயனெல டுடுஊ யனெ ணுழநவசழிந ஊழுசி

படக்குறிப்பு,2006ம் ஆண்டு வெளியான சோஃபியா கொப்போலாவின் திரைப்படம் மேரி ஆன்டோனெட் (கிர்ஸ்டன் டன்ஸ்ட்) குறித்து உருவாக்கப்பட்டது.

இளம் ராணி மேரி அன்டோனெட்டின் ஆடம்பர வாழ்க்கை, பட்டினியால் வாடிய ஏழைகளின் மனக்காயங்களை மேலும் காயப்படுத்தியது.

அவர் ஒரு பலவீனமான மனநிலை கொண்ட, சுறுசுறுப்பற்ற கணவரை திருமணம் செய்து கொண்டார். அவர், மனைவியை விட வேட்டையாடுவதில் அதிக ஆர்வம் கொண்டிருந்தார். மருத்துவ காரணங்களால் அவர்கள் திருமணத்தின் முதல் ஏழு ஆண்டுகள் உடலுறவு கொள்ள முடியவில்லை. இந்த தனிமையும் மன அழுத்தமும் மேரி அன்டோனெட்டை ஆடம்பரமான விருந்துகள், சூதாட்டம், ஃபேஷன் மற்றும் அழகுசாதன உலகில் மூழ்கடித்தது. அவர் அணிந்த ஆடைகள் மிகவும் கற்பனையுடன் அலங்கரிக்கப்பட்டவை.

அவர் உடையணிந்த பாணி பல நூற்றாண்டுகளுக்குப் பிறகும் ஃபேஷன் உலகில் தாக்கத்தை ஏற்படுத்தியது. மடோனா, ரிஹானா போன்ற பாப் நட்சத்திரங்களையும், விவியென் வெஸ்ட்வுட், டியோர், மோசினோ போன்ற பிரபல ஆடை வடிவமைப்பாளர்களையும் மேரி அன்டோனெட்டின் பாணி ஈர்த்தது.

மேரி அன்டோனெட்டுக்கு "மேடம் டெஃபிசிட்" (**Madame Déficit**) என்ற பெயர் வழங்கப்பட்டது . ஆனால் அது முற்றிலும் நியாயமற்ற ஒரு பெயர். அவர் மன்னரின் சகோதரர்களை விட குறைவாகவே செலவழித்தார்.



ஆடம்பரமாக வாழ்ந்தது அவர் ஒருவர் மட்டும் அல்லர். பிரான்சின் அரச குடும்பம் தலைமுறை தலைமுறையாகவே ஆடம்பரத்துக்குப்பெயர்பெற்றது தான். ஆனால், வெளிநாட்டில் பிறந்த ராணியாக இருந்ததால், மேரி அன்டோனெட் பிரெஞ்சு அரசாங்கத்தின் நிதி மேலாண்மை தோல்விக்கான பலிகடாவாக மாறினார்.

"உண்மையில், பிரான்ஸை திவாலாக்கியது ராணியின் ஆடம்பர செலவுகள் அல்ல. போர்களுக்காக செய்யப்பட்ட பெரும் செலவுகள் தான்," என்று வரலாற்றாளர் கிராண்ட் கூறுகிறார். "மேரி அன்டோனெட்டின் ஆடை மற்றும் ஆபரணங்களுக்கான வருடாந்திர பட்ஜெட் இன்றைய கணக்கில் சுமார் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு சமமாக இருக்கும். ஆனால் அதேநேரத்தில், பிரான்ஸ் அமெரிக்க சுதந்திரப் போருக்கு மட்டும் 11.25 பில்லியன் டொலர் செலவழித்தது," என்றும் அவர் கூறுகிறார்.

மேரி அன்டோனெட் தனது ஆடம்பரச் செலவுகளை குறைக்க முயன்ற போது, அதுவே அவருக்கு புதிய சிக்கல்களை உருவாக்கியது. "அவர் பட்டாடைகளை அணிவதை நிறுத்தியவுடன், பட்டு உற்பத்தி செய்யும் தொழிலாளர்கள் பெரும் அதிருப்தியடைந்தனர். ஏனெனில் அவர்களின் வாழ்வாதாரம் ஆபத்தில் இருந்தது," என்கிறார் வரலாற்றாளர் கிராண்ட். 1783ஆம் ஆண்டு, மேரி அன்டோனெட் தன்னை ஆடம்பரமற்ற, இயல்பான தோற்றத்தில் வெளிப்படுத்த முயன்றார். அவர் 'நாட்டுப்புற' பாணியில், எளிய உடை அணிந்த உருவப்படம் ஒன்றை வரையச்செய்தார். அந்த பாணி பின்னர் பெரிதும் பிரபலமானது.

ஆனால் விரைவிலேயே அந்த ஓவியம் அரண்மனையிலிருந்து அகற்றப்பட்டது. அதற்கு பதிலாக, வழக்கம்போல் அரச மரியாதை நிறைந்த, ஆடம்பரமான புதிய உருவப்படம் வைக்கப்பட்டது.

"அவர் எப்போதுமே ஒரு அரச மரியாதைமிக்க தோற்றத்தை வெளிப்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது" , "அதுவே முடியாட்சி தனது அதிகாரத்தையும் மரியாதையையும் காத்துக்கொள்ளும் வழியாக இருந்தது"என்கிறார் கிராண்ட்.

மேரி அன்டோனெட்டைச் சுற்றியுள்ள பல கதைகள், அவரது மனிதநேய பக்கத்தை பெரும்பாலும் மறந்துவிடுகின்றன. அவர் ஒவ்வொரு ஆண்டும் தன் ஆடைகளை மறுசுழற்சி செய்து, அவற்றை தன் அரண்மனை ஊழியர்களுக்கு பகிர்ந்தளித்தார்.

அவர் பல குழந்தைகளைத் தத்தெடுத்தார். அதில் செனகல் நாட்டைச் சேர்ந்த ஜீன் அமில்கார் என்ற சிறுவனும் இருந்தார். அந்தக் குழந்தையை அடிமைத்தனத்திலிருந்து விடுதலை செய்தவர் மேரி அன்டோனெட் தான். அவர் "தனது கணவரிடமிருந்து விலையுயர்ந்த பரிசுகளை ஏற்க மறுத்தார்" என்றும், பல தொண்டு நிறுவனங்களுக்கு தாராளமாக நன்கொடைகள் அளித்தார் என்றும் வரலாற்றாசிரியரும் எழுத்தாளருமான மெலனி பரோஸ் (முன்பு கிளெக்) தெரிவித்துள்ளார்.

"அவர் அடிக்கடி சித்தரிக்கப்படுவது போல ஒரு முட்டாள் அல்ல. மாறாக, நல்ல எண்ணம்கொண்ட, தாராள மனமும், கருணை நிறைந்தவருமாக இருந்தார்" என்று பர்ரோஸ் கூறுகிறார். ஆஸ்திரியாவுடனான நீண்டகால விரோதத்திற்குப் பிறகு, சமாதானத்தின் அடையாளமாக மேரி அன்டோனெட் பிரான்ஸ் அரசவைக்கு அனுப்பப்பட்டார்.

ஆனால், அவர் ஆஸ்திரியாவுடன் கொண்டிருந்த உறவுகள் பின்னர் அவருக்கு எதிராகத் திரும்பின. அவர், ஆஸ்திரியாவுக்கு இராணுவ ரகசியங்களை பகிர்ந்ததாக சந்தேகிக்கப்பட்டார். அவர் பிரெஞ்சு மக்கள் மீது அக்கறையற்றவர் என சித்தரிக்கப்பட்ட விதம், பொதுமக்களிடையே அவர் மீது பெரும் அவநம்பிக்கையை உருவாக்கியது.

கேலிச்சொல்லான "டுயரவசந-உாநைநெ" என்று அவரை இழிவாக அழைத்தனர்.

இந்த இழிவான பெயர், அவர் மீதான

(7ஆம் பக்கம் பார்க்க..)

# இந்தியா உட்பட விசா விண்ணப்பதாரர்களுக்கான கடுமையான புதிய ஆங்கில வழித் தேர்வுகள்




இந்தியா உட்பட விசா விண்ணப்பதாரர்களுக்கான கடுமையான புதிய ஆங்கில வழி தேர்வு தேவைகளை இங்கிலாந்து அரசு செவ்வாயன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தது. இந்த தேர்வு பொறுத்தவரை பிரிட்டனில் 12ம் வகுப்பு பயிலும் மாணவர்களின் அளவுக்கு இருக்க வேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது. தங்கள் நாட்டில் அதிகரித்து வரும் குடியேற்ற அளவை முறைப்படுத்துவதற்கான நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்தியா உட்பட விசா விண்ணப்பதாரர்களுக்கான புதிய முறையை கொண்டுவர பிரிட்டன் முடிவு செய்துள்ளது.

அந்த வகையில் விசா விண்ணப்ப தாரர்களுக்கான புதிய ஆங்கில மொழி தேர்வு தேவைகளை இங்கிலாந்து அரசு செவ்வாய் அன்று நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தது. புதிய செக்ஃயூர் இங்கிலிஷ் லாங்குஏஜ் டெஸ்டை பொறுத்தவரை உள்துறை அலுவலகத்தால் அங்கீகரிக்கப்பட்ட அமைப்பால் நடத்தப்படும் இதன் முடிவுகள் ஜனவரி 8 2026 முதல் அனைத்து திறமையான தொழிலாளர்களுக்கும் அடுத்தடுத்து விசா விண்ணப்ப செயல்முறையின் ஒரு பகுதியாக சரிபார்க்கப்படும். ஒரு விண்ணப்பதாரரின் ஆங்கிலம் பேசுதல், கேட்டல் மற்றும் வாசித்தல், எழுதுதல் ஆகியவற்றின் தரநிலை டீ2என குறிப்பிடப்படும். இது யு நிலை அல்லது வகுப்பு 12க்கு சமமாக இருக்க வேண்டும்.

இது விண்ணப்பதாரர்கள் தங்கள் வாழ்க்கையை இங்கிலாந்தில் சிறப்பாக ஒருங்கிணைக்க முடியும் என்பதை உறுதி செய்யும் என்று உள்துறை அலுவலகம் நம்புகிறது. இந்த நாட்டிற்கு வந்து பங்களிப்பவர்களை இந்த நாடு எப்போதும் வரவேற்றுள்ளது. ஆனால் புலம்பெயர்ந்தோர் தங்களது மொழியை கற்று கொள்ள வருவது. ஏற்றுக்கொள்ள முடியாதது. அப்படி வருபவர்கள் இந்த நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்க முடியாது என்று இங்கிலாந்து உள்துறை செயலாளர் ஷபானா கூறினார் . அரசாங்க திட்டங்களின் கீழ் சர்வதேச மாணவர்கள் தங்கள் படிப்பை முடித்த பிறகு கிராஜ/வேட் லெவல் வேலையை கண்டுபிடிப்பதற்கான நேரமும் தற்போதைய 2 ஆண்டுகளை பொறுத்து 12 மாதங்களோ குக்கப்படும். ஜனவரி 1 2007 முதல் பட்டதாரி மாணவர்கள் 12 மாதங்கள் மட்டுமே இந்தியாவிற்குள் தங்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வங்கதேசத்தில் பயங்கர தீ 16 பேர் பலி



வங்கதேசத்தில் ஆடை தொழிற்சாலை, ரசாயன கிடங்குகளில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 16 பேர் பலியாகினர். வங்கதேச தலைநகர் டாக்காவில் ரூப்நகரின் மிர்பூர் என்ற இடத்தில் மிகப்பெரிய ஜவுளி உற்பத்தி ஆலை இயங்கி வருகிறது. இங்கு நேற்று வழக்கம்போல் ஏராளமான தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

இந்த ஆலையையொட்டி ரசாயன கிடங்கு அமைந்துள்ளது. இந்த கிடங்கில், ரசாயனங்கள் சேமித்து வைக்கப்பட்டுள்ளன. நேற்று காலை ரசாயன கிடங்கில்திடீர் தீ விபத்து ஏற்பட்டது. இது மள,மளவென அருகிலிருந்த ஜவுளி உற்பத்தி தொழிற்சாலைக்கும் பரவியது. இந்த தீ விபத்தில் 16 பேர் பலியாகினர். படுகாயமடைந்த பலர் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ஐ)

## மெக்சிகோவில் மழை, வெள்ளத்தில் சிக்கி 64 பேர் உயிரிழப்பு: 65 பேர் மாயம்!

மெக்சிகோவில் மழை, வெள்ளத்தில் சிக்கி 64 பேர் உயிரிழந்துள்ளனர். வட அமெரிக்காவில் அமைந்துள்ள மெக்சிகோ நாடு அருகே பசுபிக் கடலில் புயல் உருவாகியது. இந்த புயலுக்கு ‘ரேமண்ட்’ என பெயரிடப்பட்டது. இந்த புயல் காரணமாக மெக்சிகோவில் கனமழை கொட்டி தீர்த்தது. அந்நாட்டின் 32 மாகாணங்களிலும் கனமழை வெளுத்து வாங்கியது. தொடர் கனமழை காரணமாக, அந்நாட்டின் பல்வேறு பகுதிகளில் வெள்ளப்பெருக்கு, நிலச்சரிவு ஏற்பட்டது.

அதிலும் குறிப்பாக, அந்நாட்டின் குவாரடிரோ, ஹிடல்கோ, வெரகுரூஸ், சன் லுயிஸ் பொடொசி ஆகிய நகரங்கள் அதிக அளவிலான பாதிப்பை சந்தித்துள்ளன. காசோன்ஸ் ஆற்றின் கரையில் இருந்து வெளியேறிய தண்ணீரால் கார்கள் அடித்து செல்லப்பட்டன. நிலச்சரிவில் 1,000க்கும் மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தன. மேலும், 59 மருத்துவமனைகள் மற்றும் கிளினிக்குகள், 308 பள்ளிகள் சேதம் அடைந்தன.

இந்த நிலையில், கனமழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி மெக்சிகோவில் இதுவரை 64 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 100க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மீட்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

பாதிக்கப்பட்ட மக்கள் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மழை வெள்ளத்தில் சிக்கி மாயமான 65 பேரைத் தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. ஆயிரக்கணக்கான ராணுவத்தினர் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர். இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

இந்த பேரிடரைத் தொடர்ந்து, மெக்சிகோ அதிபர் கிளாடியா ஷீன்பாம் தலைமையிலான அரசு, அவசரகால மீட்புப் பணிகளை முடுக்கிவிட்டுள்ளது. ராணுவம், விமானப்படை மற்றும் தேசிய பாதுகாப்புப் படையைச் சேர்ந்த 5,400க்கும் மேற்பட்ட வீரர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர். (ஐ)






## இன்ஸ்டாகிராமில் இளம் வயதினர் கணக்குகளுக்கு புதிய கட்டுப்பாடுகளை விதித்தது மெட்டா நிறுவனம்!!

இன்ஸ்டாகிராமில் இளம் வயதினர் கணக்குகளுக்கு புதிய கட்டுப்பாடுகளை மெட்டா நிறுவனம் விதித்துள்ளது.

குழந்தைகளின் நல்வாழ்வுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற சமூக அழுத்தத்தின் காரணமாக மெட்டா இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது. **PG-13 (Parental Guidance advised for children under 13)** தர மதிப்பீட்டு விதிகளுக்கு இணங்க இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக மெட்டோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த செப்டம்பரில் டீன் அக்கவுண்ட்ஸ் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு மேற்கொள்ளப்படும் மிக முக்கியமான ஒன்று இது என்றும் அந்நிறுவனம் கூறியுள்ளது. இன்ஸ்டாகிராம் ீபு-13 என்ற தரநிலையைப் பயன்படுத்துவதன் மூலம், பாலியல் உள்ளடக்கிய காட்சிகள், போதைப் பொருள், அபாயகரமான சண்டை காட்சிகள் அல்லாத வீடியோக்களை இளம் வயதினர் காண வழிவகை செய்யும்.இந்த கட்டுப்பாடுகளை விரும்பும் பெற்றோருக்கு, இன்ஸ்டாகிராமில் **Limited Content** என்ற வசதி கொண்டு வரப்பட்டுள்ளது.

சிறார்கள் தங்களை 18 வயதுக்கு மேற்பட்டோர் எனக் கூறினாலும் அதனை கண்டறிய அதற்கான தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட உள்ளது. தேவையில்லாதவற்றை பின்தொடர்வதும், தகவல் அனுப்புவதும், கருத்து தெரிவிப்பதும் தடுக்கப்படும்.

பெற்றோரின் அனுமதியின்றி இன்ஸ்டாகிராமில் இதற்கான வசதிகளை மாற்ற முடியாது. இந்த புதுப்பிப்பு தற்போது ஆஸ்திரேலியா, பிரிட்டன், கனடா மற்றும் அமெரிக்காவில் படிப்படியாக வெளியிடப்படுகிறது.

மேலும் பல நாடுகளுக்கு வரும் மாதங்களில் விரிவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (ஐ)

## 13 வயது.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்கிழமை மாலை 5.45மணியளவில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சிறுமியின் வீட்டுக்கு உறவினர்கள் வந்திருந்த நிலையில் உறவினரின் குழந்தைக்காகத் தொட்டில் கட்டப்பட்டுள்ளது. அதில் சிறுமி ஊஞ்சல் ஆடி விளையாடிக் கொண்டிருந்த நிலையில் அவர் தொட்டிலில் தொங்கிய நிலையில், பேச்சு மூச்சு அற்ற நிலையில் காணப்பட்டார் என்று சிறுமியின் உறவினர்கள் தெரிவித்தனர்.

தனது சகோதரி பேச்சு மூச்சு அற்ற நிலையில் இருப்பதைக் கண்ட சகோதரன், இது பற்றி தெரிவித்து அயலவர்களை அழைத்ததையடுத்து சிறுமியை மீட்டெடுத்த அயலவர்கள் பொகவந்தலாவை மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர்.

சிறுமி உயிர்ழந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டார் என்று வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தனர்.

பொகவந்தலாவை பொகவானை தோட்டத்தைச் சேர்ந்த 13 வயதுடைய மதுமதன் ஜென்சியா என்ற சிறுமியே சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரிவந்துள்ளது.

இதேவேளை, சம்பவம் தொடர்பில் ஹட்டன் நீதிமன்ற பதில் நீதிவான் புபூது ஜிந்தக்க தலைமையில் மரண விசாரனைகள் இடம்பெற்று, சிறுமியின் சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கள் ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தொட்டிலில் தொங்கி விளையாடியபோது உயிரிழப்பு நடந்ததா அல்லது வேறு ஏதேனும் நடந்துள்ளதா என்பது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொகவந்தலாவைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ரிஷாத்துக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வழக்கறிஞர் ஹிஜாஸ் ஹிஸ்புல்லா நீதிமன்றத்தில் வாதிட்டார். மேலும் மனுதாரர்கள் தொடர்ந்து வழக்கை முன்னெடுக்கத் தவறியதால் வழக்கைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கோரியிருந்த நிலையில், அந்தச் சமர்ப்பிப்பிற்கு இணங்க, இன்று மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த ரிட் மனுவைத் தள்ளுபடி செய்தது.

மனுதாரர்களுக்காக வழக்கறிஞர் சுகந்திகா ஆஜராகியதுடன் 1 முதல் 3ஆம் பிரதிவாதிகளுக்காக உப சட்ட மா அதிபர் மனோஹரா ஜயசிங்க ஆஜராகியிருந்தார். பஸில் ராஜபக்ஷவுக்காக வழக்கறிஞர் ருவந்த குரே ஆஜரானார். நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் சார்பாக சட்டத்தரணிகளான ஹிஜாஸ் ஹிஸ்புல்லா மற்றும் ஷிபான் மஹ்ரூப் ஆஜரானார்கள். நீண்ட நாட்களாக நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிராக எழுந்த இந்தக் குற்றச்சாட்டு மூலம் அவர் மீது இனவாத அரசியல் மேற்கொள்ளப்பட்டதுடன், வடக்கு மக்களின் மீள்குடியேற்றத்துக்கு எதிராகவும் பல்வேறான இனவாத செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## வல்வெட்டித்துறை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது , வல்வெட்டித்துறை நகர சபையில் தமிழ்த் தேசிய பேரவை சார்பில் பட்டியல் உறுப்பினராக எம்.கே.சிவாஜிலிங்கத்தின் பெயர் காணப்பட்டது தேர்தல் முடிவுகளின்படி, பட்டியல் உறுப்பினராக பெண் உறுப்பினர்களையே தெரிவு செய்ய வேண்டும் எனத் தேர்தல் ஆணைக்குழு அறிவித்தமையால் தமிழ்த் தேசியப் பேரவை சார்பில் பட்டியல் உறுப்பினராக சிவாஜிலிங்கம் உறுப்பினராக முடியவில்லை. இந்நிலையில், வல்வெட்டித்துறை நகர சபை உறுப்பினர் ஒருவர் தனது பதவியை இராஜினாமா செய்ததன் ஊடாக அவரது வெற்றிடத்துக்கு புதிய உறுப்பினராக சிவாஜிலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்

## லொறி - பேருந்து விபத்து 20 பேர் காயம்

கித்துல்கலையில் இருந்து அவிசாவளை கைத்தொழில் பேட்டை நோக்கி ஊழியர்களை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்து , எதிர் திசையில் வந்த லொறியுடன் மோதி விபத்துக்குள்ளானதில் 20 பேர் காயமடைந்து கரவனெல்ல மற்றும் கித்துல்கலை வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவ்விபத்து புதன்கிழமை காலை இடம்பெற்றுள்ளது. குறித்த தனியார் பேருந்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில், எதிர் திசையில் வந்த லொறி,வேகக்கட்டுப்பாட்டை இழந்து பேருந்துடன் மோதியுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. லொறியின் சாரதி நுவரெலியா பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதுடன் , அவர் எட்டியாந்தோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை எட்டியாந்தோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# 29 இந்திய மீனவர்கள் தொடர்ந்து மறியலில்

*யாழ்ப்பாணம், ஒக். 15*

*நெடுந்தீவுக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 29 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் தொடர்ந்து வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.*

*கைது செய்யப்பட்ட 29 இந்திய மீனவர்களின் வழக்கு இன்று புதன்கிழமை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.*

*கடந்த செப்டெம்பர் மாதம் 28 ஆம் திகதி நெடுந்தீவுக் கடலில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுப்பட்ட 12 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.*

*அதேபோல் கடந்த 9ஆம் திகதி நெடுந்தீவுக் கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுப்பட்ட 17 இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இவ்வாறு இரு வேறு தினங்களில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் இன்று முற்படுத்தப்பட்டிருந்தனர். அந்த வழக்கை விசாரித்த ஊர்காவற்றுறை நீதிவான் எதிர்வரும் 29ஆம் திகதி வரை 29 மீனவர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். இதேவேளை இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 36 படகுகளுடன் 279 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# வேலன் சுவாமி – கஜேந்திரகுமார் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஒக். 15

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும்நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தவத்திரு வேலன் சுவாமியைச் சந்தித்து நீண்ட நேரம் கலந்துரையாடியுள்ளார்.

யாழ். நல்லூரில் அமைந்துள்ள சிவகுரு ஆதீனத்தில் வேலன் சுவாமியை நேற்று செவ்வாய்க்கிழமை நேரில் சந்தித்து, சமகால அரசியல் தொடர்பில் அவர் கலந்துரையாடியுள்ளார்.

சுமார் ஒன்றரை மணிநேரத்துக்கு மேல் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரனும் கலந்துகொண்டிருந்தார்.

# ஆதிக்கத்தால்...

வெறுப்பையும் அவநம்பிக்கையையும் பிரெஞ்சு சமூகத்தில் மேலும் தீவிரப்படுத்தியது.

மன்னனுக்கு அதிகாரம் வழங்கப்பட்டது, ஆனால் ஒரு ராணி அரசியலில் தலையிடக் கூடாது, பின்னணியில் இருப்பதே மரபு என்று கருதப்பட்டது. ஆனால் மேரி அன்டோனெட் அந்த மரபை மீறியதாகக் கூறப்பட்டது. அவர் மிகத் துடிப்பானவராகவும், அரசியல் விவகாரங்களில் தலையிட்டவராகவும் சித்தரிக்கப்பட்டார்.

அவர்தனது வசீகரத்தையும்செல்வாக்கையும்பயன்படுத்தி அமைச்சர்களிடம் மறைமுக தாக்கத்தைச் செலுத்தினார் என்றும், நாட்டுக்குத் தேவையான அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கு எதிராக இருந்தார் என்றும் குற்றம் சாட்டப்பட்டது. இதனால் அவரது எதிரிகள் அவரை வீழ்த்த வேண்டும் என்ற எண்ணத்தில் செயற்படத் தொடங்கினர்.

அவதூறான துண்டு பிரசுரங்கள் பரப்பப்பட்டன. அவற்றில் சில ஆபாசமானவையாக இருந்தன.

அவற்றில் அவர் ஒழுக்கக்கேடானவர், கேளிக்கைகளில் ஈடுபட்டவர், பெண்களுடன் உறவு வைத்தவர் என்றும் தனது குடும்பத்தினருடன் கூட தவறான உறவுகள் கொண்டவர் என்றும் குற்றம் சாட்டப்பட்டது.

உண்மையில், அவருடைய அறியப்பட்ட காதலர், கவுண்ட் ஆக்செல் வான் ஃபெர்சன் மட்டுமே. இந்த வதந்திகள் அனைத்தும் "ஆணாதிக்கத்தால் தூண்டப்பட்டவை," என்று வரலாற்றாளர் கிராண்ட் கூறுகிறார்.

"அவரைப் பற்றிய பெரும்பாலான புரளிகள் 19ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட வாழ்க்கை வரலாறுகளிலிருந்து வந்தவை. அவை அனைத்தும்ஆண்களால்எழுதப்பட்டவை," என்றும் அவர் கூறுகிறார். பர்ரோஸின் கூற்றுப்படி, அவர் உண்மையில் மிகவும் விவேகமானவர்.

அவர் அரிதாகவே மதுபானம் அருந்தினார். மேலும் "தனது சொந்த பணியாளர்கள் கூட தன்னை நிர்வாணமாக பார்ப்பதை வெறுத்தார்."

ஆனாலும் , அவரைச் சுற்றி தொடர்ந்து தவறான கதைகள் பரப்பட்டன.

2020ல் வெளியான மேரி அன்டோனெட்டின் உலகம்: சூழ்ச்சி, துரோகம் மற்றும் வெர்செய்ல்ஸ் அரண்மனையில் நடந்த பாலியல் தொழில் என்ற நூலில் வரலாற்றாசிரியர் வில் பாஷோர், அவரது நீண்டநாள் கருப்பை ரத்தப்போக்கு, பாலியல் நோயால் ஏற்பட்டதாக ஊகிக்கிறார். அதே நேரத்தில், அவர் "உளவியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்பட்டவர்", "சலித்துப்போனவர்", "புறக்கணிக்கப்பட்டவர்" என்றும் குறிப்பிடுகிறார். திருமணத்திற்கு வெளியே இன்பத்தைத் தேடியவர் என்று குற்றம் சாட்டினாலும், முடிவில், "அவர் மன்னிக்கப்பட வேண்டியவர்" என்கிறார் வில் பாஷோர்.

உண்மையில், மேரி அன்டோனெட் ஒரு அன்பும் அர்ப்பணிப்பும் நிறைந்த தாய் என்று நார்தம்ப்ரியா பல்கலைக்கழகத்தின் நவீன ஐரோப்பிய வரலாற்றாசிரியர் முனைவர் லாரா ஓ'பிரையன் கூறுகிறார். தனது குழந்தைகளுடன் அவர் கொண்டிருந்த உறவு "மென்மையானதும்உணர்ச்சிப்பூர்வமானதுமாக" இருந்தது. அது அவர் வளர்க்கப்பட்ட முறைக்கு நேர்மாறானது.

அவர் தாய்ப்பால் கொடுத்த முதல் பிரெஞ்சு ராணியாகவும், தனது ஓவியங்களில் காணப்பட்டபடி, எளிய, தாய்மையின் சின்னமாகிய ஆடை அணிந்த ராணியாகவும் இருந்தார்.

ஐரோப்பாவின் மிகவும் வெறுக்கப்பட்ட ராணியாக இருந்த மேரி அன்டோனெட்டின் மீதான ஈர்ப்பு இன்னும் குறையவில்லை. அதற்குக் காரணம், அவரது வாழ்க்கையின் சோகக் கதைதான்.

ஒரு அரச குடும்பத்தைச் சேர்ந்த சிறுமி, இளம் வயதிலேயே ஒரு அசாத்தியமான நிலைக்கு தள்ளப்பட்டார்.

இறுதியில், வெள்ளை ஆடை அணிந்த சோகமான உருவமாக, தலைமுடி மழிக்கப்பட்ட நிலையில், ஒரு வண்டியில் ஏற்றி மரண தண்டனையை நிறைவேற்ற அழைத்துச் செல்லப்பட்டார்.

புரட்சியாளர்களுக்கு, பிரான்ஸ் மாற்றிக்கொள்ள வேண்டிய அனைத்திற்கும் மேரி அன்டோனெட் ஒரு சின்னமாக மாறினார்.

1793 ஆம் ஆண்டில் அவருக்கு வழங்கப்பட்ட மரண தண்டனை, பிரான்ஸை பழைய அரசாட்சியின் (யுஉெறைெ சுநபைஅந) தீமைகளிலிருந்து சுத்தப்படுத்தும் முயற்சியாகக் கருதப்பட்டது. ஆனால், அவரது மரணத்தால் அவரது செல்வாக்கை குறைக்க முடியவில்லை.

அதற்கு பின், குறுகிய "முள்ளம்பன்றி" பாணியிலான முடி வெட்டும் முறையும் , கில்லட்டினை நினைவூட்டும் ரத்த சிவப்பு நிற கழுத்தணிகளும் (உாழமநசள) ஃபேஷனாக மாறின.

அவரைப் பற்றிய வதந்திகளை நம்பியவர்கள் அவரை வெறுத்தனர். ஆனால் பலரும் அவரைப் போற்றினர். இன்று வரை அவரது புகழ் நீடித்துள்ளது.

"இந்தக் கண்காட்சி நடப்பது எனது கனவு நனவானது போல உள்ளது", "இது மேரி அன்டோனெட்டின் மறுபிறப்பு" என்கிறார் புகழ்பெற்ற வடிவமைப்பாளர் மனோலோ பிளானிக்.

**'Marie Antoinette Style'** என்ற இந்தக் கண்காட்சி லண்டனின் சவுத் கேன்சிங்டனில் உள்ள விக்டோரியா அண்ட் ஆல்பர்ட் அருங்காட்சியகத்தில் கடந்த செப்ரெம்பர் 20 ஆம் தேதி முதல் நடைபெறுகிறது. இந்த கண்காட்சி, 2026 மார்ச் 22 வரை நடைபெறுகிறது. இக்கண்காட்சியுடன் ஏரூயு பப்ளிஷிங் மூலம் ஒரு புத்தகமும் வெளியிடப்பட்டுள்ளது.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.10.2025 வெளியிடப்பெற்றது.